– சேரமான்



# மேற்குலகின் தாளத்திற்குப் பாசாங்கு செய்யும் சிங்களம்

ஆயுத எதிர்ப்பியக்கமாக 1970களில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் பரிணமித்ததில் இருந்து சிங்கள தேசத்தின் வெளியுறவு இராசதந்திரம் என்பது தமிழ் – சிங்கள தேசியப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டே வனையப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தனது வெற்றியைக் கடந்த ஆண்டு மே 18ஆம் நாளன்று சிங்கள அரசு பிரகடனம் செய்துகொண்ட பொழுதும், ஓராண்டுக்குப் பின்னரும் சிங்கள தேசத்தின் வெளியுறவு இராசதந்திரம் என்பது தமிழ் – சிங்கள தேசியப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மீளெழுச்சி தொடர்பான அச்சமே இதற்கு முதன்மையான காரணியாகத் திகழ்வதை கடந்த ஓராண்டாக சிங்கள தேசம் முன்னெடுத்து வரும் வெளியுறவு இராசதந்திர நடவடிக்கைகள் நிதர்சனப்படுத்துகின்றன.

வன்னிப் போரின் இறுதிக்கட்டத்தில் சிங்களப் படைகளின் யுத்த வெற்றி நிச்சயிக்கப்பட்டிருந்த நிலையில், 'தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான சூழல்' என்ற எண்ணவோட்டத்தில் சிங்கள தேசத்துடனான உறவை மேற்குலகம் கட்டமைத்துக் கொள்ள முற்பட்டிருந்தது. எனினும் போருக்குப் பின்னர் சீனா – ரஷ்யா – ஈரான் என்ற மேற்குலக எதிர்ப்பு அணியை நோக்கித் தனது நகர்வுகளை சிங்கள தேசம் விரிவுபடுத்தத் தொடங்கிய பொழுது, மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் என்ற கோணத்தில், சிங்கள அரசைத் தனது பிடிக்குள் கொண்டு வருவதற்கான அழுத்தங்களை மேற்குலகம் பிரயோகிக்கத் தொடங்கியது. வன்னிப் போர் நிறைவடையும் வரை அமைதி காத்த மேற்குலக ஊடகங்கள் திடீரென சிங்களப் படைகளால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் – போர்க்குற்றங்கள் தொடர்பான காணொளிகளையும், செய்திகளையும் வெளியிடத் தொடங்கின. சிங்கள அரசைக் கண்டனம் செய்து அடுக்கடுக்காக மேற்குலக மனித உரிமை அமைப்புக்களும் அறிக்கைகளை வெளியிட்டன. இவற்றுக்கு சிகரம் வைத்தாற்போன்று போர்க்குற்ற ஆய்வுகள் தொடர்பாகவும், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வும், தமிழ் – சிங்கள சமூகங்களிடையே நல்லிணக்கமும் எட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் மேற்குலக அரசுகள் கருத்துக்களை வெளியிடத் தொடங்கின.

மே 18இற்குப் பின்னர் தேர்தல் திருவிழாக்களுக்குள் முடக்கப்பட்ட புலம்பெயர்வாழ் தமிழீழ மக்களை மேற்குலகின் இவ்வாறான நடவடிக்கைகளே தட்டியெழுப்பத் தொடங்கியிருந்தன என்ற உண்மையை இங்கே நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒருபுறம் எல்லாம் முடிந்துவிட்டது என்று ஒருதரப்பினர் ஓய்வெடுக்க முற்பட, மறுபுறம் இராசதந்திரப் போராட்டம் என்ற தலைப்பின் கீழ் தேர்தல் சகதிக்குள் தம்மை இன்னொரு தரப்பினர் முடக்கிக் கொண்ட வேளையில், ஒவ்வொரு புலம்பெயர்வாழ் தமிழீழ மக்களையும் ஓரளவுக்காவது மீண்டும் சிந்திக்க வைத்த பெருமை இந்த மேற்குலக ஊடகங்களையும், மனித உரிமை அமைப்புக்களையும், அரசுகளையுமே சாந்திருப்பதை நாம் மறுக்க முடியாது.

கடந்த ஆண்டு மே 18இற்குப் பின்னர் புகலிட தேசங்களில் ஓய்ந்துகிடந்த அறவழிப் போராட்டங்கள், மேற்குலக ஊடகங்களில் அடிக்கடி வெளியாகும் காணொளிகளைத் தொடர்ந்து ஓரளவுக்கு வரையறுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டங்களாக முளைவிட்டு மீண்டும் மீண்டும் ஓய்ந்துபோவது இதனையே எடுத்தியம்புகின்றது.

இவற்றுக்கு அப்பால் சென்று சில உண்மைகளை நாம் அலசிப் பார்ப்போமானால், சிங்களப் படைகளால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், மானிடத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான காணொளிகளையும், ஆவணங்களையும் அடிக்கடி மேற்குலக ஊடகங்களும், மனித உரிமை அமைப்புக்களும் வெளியிடுவது தமிழீழ மக்கள் மீது கொண்ட கரிசனையால் அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். கடந்த ஆண்டு வன்னியில் மிகப்பெரும் அவலம் அரங்கேறிக் கொண்டிருப்பதை நன்கு அறிந்திருந்தும், அதற்குப் புலிச்சாயம் பூசி உண்மைகளை இருட்டடிப்பு செய்த மேற்குலக ஊடகங்களும், மனித உரிமை அமைப்புக்களும் திடீரென மே 18இற்குப் பின்னர் மனம்திருந்தி எமக்காகக் குரல்கொடுப்பதாக நாம் கருதிவிட முடியாது. வன்னிப் போரில் சிங்களப் படைகளால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இப்பொழுது அடிக்கடி செய்தி வெளியிடும் மேற்குலக ஊடகங்கள், ஒவ்வொரு தடவையும் தவறாமல் தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொடூரமான பயங்கரவாதிகளாக சித்தரிக்கும் சொற்பதங்களைக் கையாள்வது, இவ்வாறான ஊடகங்களினதும், மனித உரிமை அமைப்புக்களின் எண்ணவோட்டத்தை நாம் நாடிபிடித்துப் பார்ப்பதற்குப் போதுமானதாக இருக்கின்றது.

**சிங்கள அரசு மீதான மேற்குலகின் அழுத்தம் என்பது கடந்த ஓராண்டாக அதிகரித்து வருகின்ற பொழுதும், அது மேலும் அதிகரித்துச் செல்லும் என்று நாம் நம்பிக்கை கொள்ள முடியாது. மேற்குலகிடம் மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் எப்பொழுது மண்டியிடுகின்றதோ, அப்பொழுதே தமிழீழ மக்கள் மீதான மேற்குலகின் கவலையும், கரிசனையும் முடிவுக்கு வந்துவிடக்கூடிய அபாயச்சூழலே தற்பொழுது நிலவுகின்றது...!**

சுயாதீனத்தன்மை தொடர்பாக மேற்குலக ஊடகங்களும், மனித உரிமை அமைப்புக்களும் பேசிக் கொண்டாலும், அவற்றின் நிதிமூலமும், இருப்பும் மேற்குலக அரசுகளின் தயவிலேயே தங்கியிருப்பதை நாம் மறந்துவிட முடியாது. இவ்வகையில் மேற்குலக அரசுகளின் வெளியுறவுக் கொள்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் பிரதிபலிக்கும் அமைப்புக்களாகவே மேற்குலக ஊடகங்களும், மனித உரிமை அமைப்புக்களும் திகழ்கின்றன. இக்கண்ணோட்டத்தில் நின்று மேற்குலக ஊடகங்களினதும், மனித உரிமை அமைப்புக்களினதும் கடந்த ஓராண்டுகால நடவடிக்கைகளை நாம் பொருத்திப் பார்க்கும் பொழுது, மேற்குலகின் நிகழ்ச்சித் திட்டத்தைப் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

அதாவது, சீனா – ரஷ்யா – ஈரான் என்ற ஓர் அச்சின் திசையில் வழிதவறிப் பயணிக்கும் சிங்கள அரசை, தனது தாராண்மைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்குள் கொண்டுவந்து வழிப்படுத்தித் திருத்தியெடுப்பதே மேற்குலகின் தற்போதைய அணுகுமுறையாகவும், நிகழ்ச்சித் திட்டமாகவும் விளங்குகின்றது. இதற்கான கருவிகளாக ஊடகங்களையும், மனித உரிமை அமைப்புக்களையும் சிங்கள தேசத்தின் மீது மேற்குலகம் ஏவி விடுகின்றது. இதனால் சிங்கள அரசுக்கும், அதன் ஆயுதப் படைகளுக்கும் உலக அரங்கில் ஏற்படும் அபகீர்த்தி தமிழீழ மக்களுக்கு ஓரளவு ஆறுதலை அளித்தாலும்கூட, தமிழீழ தேசத்தின் அரசியல் அபிலாசைகளைப் புரிந்துகொண்டு, தமிழீழ மக்களுக்கு மேற்குலகம் நீதி வழங்கும் என்று நம்பிக்கை கொண்டு நாம்

*(10ம் பக்கம் பார்க்க)*